செய்தி வெளியீட்டு எண்.886 நாள்: 9.10.2010

**<u>மீன்வளத்துறையில் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.</u>**

**மீன்வளத்துறையில் கடந்த நான்கு ஆண்டுகளில் 46 பேர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், 93 பேர்கள் மீன்வளத்துறையில் பல்வேறு பதவிகளில் நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த நான்கு ஆண்டுகளில் 242 ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, மீன்வளத்துறையிலிருந்த காலி பணியிடங்களின் எண்ணிக்கை கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது.**

**மீன்வளத்துறையில் பணியாற்றி பணியில் இருக்கும்போது உயிரிழந்த ஊழியர்களின் 15 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் மீன்வள மேற்பார்வையாளர், மீன்வள உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கு பணிநியமன ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (9.10.2010) புனித ஜார்ஜ் கோட்டையில் வழங்கினார்.**

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி. சாமி, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறைச் செயலாளர் திருமதி. எம்.பி. நிர்மலா, மீன்வளத்துறை இயக்குநர் திரு. கே.கே. செல்லமுத்து மற்றும் மீன்வளத்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.